செய்தி வெளியீடு எண்.762 நாள்.**23–11–2007**

**கடலூர் மாவட்டத்தில் குள்ளஞ்சாவடியில் 20–11–2007 அன்று ராமலிங்கம் என்பவர் மரணமடைந்ததை யொட்டி நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் விசாரணை நடத்துவதற்காக உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து, இன்று காலையில் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களை இறந்த ராமலிங்கம் அவர்களின் துணைவியாரும், தாயாரும் மற்றும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் சட்டப் பேரவை உறுப்பினர் வேல்முருகன் அவர்களும் சந்தித்து நிலைமைகளை விளக்கினார்கள்.**

**அப்போது அமைச்சர்கள் பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் இருந்தனர்.**

**முதலமைச்சர் அவர்கள் சம்பவம் பற்றி விவரமாகக் கேட்டறிந்ததோடு, நீதி விசாரணை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் முடிவாக எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்பதால், உடனடியாக அந்தக் குடும்பத்திற்கு உதவிடும் வகையில் இடைக்கால நிவாரணமாக ஒரு இலட்சம் ரூபாயினை மறைந்தவரின் துணைவியாருக்கு அளிக்க வேண்டுமென்று கூறி, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக அதனை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள்.**

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**